உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சஉ.] தாரண-ஞூ தைமீ [பகுதி—௩.

Vol. 42. January-February 1945. No. 3.

உள்ளுறை.

வாழ்க்கையும் விஞ்ஞானமும்:- } ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. ௪௫—௬௨

மதிப்புரை:— ... ... ... ... ௬௨—௬௩

புண்டைத்தமிழர்:— } சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர் ௬௪—௬௮

ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர்மன்ற ஆண்டுவிழாக்கொண்டாட்டம்:- } ஸ்ரீ. வ. சு. இராஜஐயனாரவர்கள். ௬௯—௭௦

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1945.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press. No. 54, Tamil Sangam Road, Madura.

8372

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—சஉ.] தாரண-ஞு தைமீ [பகுதி—ங.

Vol. 42. January-February 1945. No. 3.

## வாழ்க்கையும் விஞ்ஞானமும்*

ஸ்ரீ பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.

[கக-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இயற்கையிலுள்ள பொருள்களை நாம் அறிய அறிய, அவற்றின் நுட்பங்களை நாம் தெரியத் தெரிய, அவற்றின் விந்தை மேன்மேலும் மிகுந்துகொண்டேவருகிறது. பாவம் நிறைந்த மனத்தோடு விஞ்ஞானவிஷயங்களை நாம் பார்க்கும்போதெல்லாம் அவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு விந்தையாகவே தோன்றுகிறது. பசும்புல்லும், வானில் ஒளிவீசிச்செல்லும் நக்ஷத்திரமும், சிற்றெறும்பும், சிறுமணலும், பறவையின் முட்டையும், மரப்பொந்தில்வாழும் தேரையும், தரையில் புரண்டுபடரும் கொடியும், கையெலும்பிலுள்ள சிறுநீலும், தலைகுனிந்து புல்லைக் கறிக்கும் பசுவும், அற்பச் சுண்டெலியும் இவற்றுள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தாழ்வுபடாமல்

* மயிலைத்தமிழ்ச்சங்கத்திற்செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது.

மனத்தைப் பிரமிக்கச்செய்யும் ஓர் அற்புதம் என்று விட்மன் கூறுகிறார்.*

வீட்டில் விளக்கு எரியும்போது எங்கிருந்தோ ஓடிவந்த விட்டில் அதைச் சுற்றிச் சுற்றிப் பறப்பது எல்லாரும் காணும் சாமானியக் காட்சி. ஆங்கிலக்கவி ஒருவர் இதைப்பற்றி மிகவும் அழகான பாட்டு ஒன்றைப் பாடியிருக்கிறார். இருள் செறிந்த இரவிலே, புஷ்பங்கள் மலர்ந்துகமழும் வேளையிலே, மெல்லென வீசும் காற்றில் அலைவுறும் சிறுவிளக்கின் சுவாலையானது அலை மோதும் கடலிடையே அழிவுறுதுநிற்கும் சிறு தீவைப்போலக் கவியின்கண்களுக்குத் தோன்றுகிறது, காற்றில் அசையும் சுவாலை இருட்டில் ஒளித்திருக்கும் விட்டிலை 'வா' 'வா' என்று அழைப்பது போல் அவருக்குத் தோன்றுகிறது. அழகிய பட்டாடை அணிந்து, இளமையும் வனப்பும் மிகுந்து, துயில்விழித்தெழும் மங்கையைப் போல் விட்டில் அவருக்குக் காட்சியளிக்கிறது. மோகனவலைவீசும் அழகிய கண்களை மலரவிழித்துப் பனியினும் மென்மையான தன்னுடைய இறகுகளின்மீதில் மெல்லென மிதந்து, மனம் மயங்கி, மதிமயங்கித் தன் காதலனும் ஒளிச்சுடரை ஆசையோடு அது காணவருவதுபோல் அவருக்குத் தோன்றுகிறது. அற்பமான

---

[* A leaf of grass is no less than the journey-work of the starsl
And the ant is equally perfect, and the grain of sand, and the egg of the wren,
And the tree-toad is a masterpiece for the highest,
And the running blackberry would adorn the parlours of heaven,
And the narrowest hinge on my hand puts to scorn al, machinery,
And the cow crunching with depressed head surpasses any statue,
And a mouse is miracle enough to stagger sextillions of infidels"

—WHITMAN]

விஞ்ஞான விஷயம் ஒன்றிலிருந்து அழகான கவி ஒன்று பிறந்து விட்டது *

பாம்பைக்கண்டு அஞ்சாதவரும் இல்லை; அதன் அழகில் ஈடுபடாதவரும் இல்லை என்று சொல்லலாம்.

1. நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைகொள்பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே.

2. வளைபுகும் போதேதலை வாங்கும்பாம்பே
மண்டலமிட் டுடல்வளை வண்ணப்பாம்பே
தளைக்கஞ்சி நின்றிடும் சத்தியப்பாம்பே
தலையெடுத் தேவிளை யாடுபாம்பே.

3. குற்றமற்ற சிவனுக்குக் குண்டலமானாய்
கூறுர்திரு மாலினுக்குக் குடையானாய்
கற்றைக்குழற் பார்வதிக்குக் கங்கணமானாய்
கரவாமல் உளங்களித் தாடுபாம்பே.

---

[* **The Moth**

Isled in the midnight air,
Musked with the dark's faint bloom,
Out into glooming and secret haunts
The flame cries "Come!"

Lovely in dye and fan,
Atremble in shimmering grace,
A moth from her winter swoon
Uplifts her face.

Stares from her glamorous eyes;
Wafts her on plumes like mist;
In ecstasy swirls and sways
To her strange tryst.

—WALTER DE LA MARE.]

4. மண்டலத்தைத் தாங்குமிகு வல்லமைகொண்டாய்
மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப்பாயானாய்
கண்டபகை நடுங்கிடக் காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவி யாகக்கொண்டா யாடுபாம்பே.

5. சந்திரனைச் சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக் காபரணந் தானுமாகினாய்
மந்திரத்திற் கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்து வளைந்துநின் றாடுபாம்பே.

மேலே கூறிய கவிகளில் வர்ணித்திருக்குமாறு அது நமது தெய்வங்கள் அனைவரையும் வளைத்துக்கொண்டது. அதை ஆங்கிலநாட்டு ஆசிரியர் ஒருவர் மிக அழகாக வர்ணித்திருக்கிறார். எத்தனை உவமைகள் அவருக்குத் தோற்றுகின்றன! வழவழப்பான வெள்ளியோடை, நிலத்தில் மெல்லென மிதந்துசெல்லும் படகு, காற்று எழுப்பாத அலை, சரிந்து ஓடாத நீரோட்டம், ஒலியற்று இயங்கும் வளையத்தொடர், முறுக்கிய அம்பு, நஞ்சு தோய்ந்த உயிர், வீசி எறிந்த ஈட்டி—என்றெல்லாம் அவர் பாம்பை வர்ணிப்பதைப் படிக்கும்போது நாமும் நமக்கு இயற்கையாக உள்ள அச்சத்தை ஒதுக்கிவிட்டுப் பாம்பின் அழகில் ஈடுபடுகிறோம். ஹாஸ்யச்சுவை ததும்ப அதன் நாவின் பயனைப்பற்றி அவர் ஆராயும்போது, பாம்பின் பயங்கரச்செயலானது நமக்குச் சிரிப்பூட்டுகிறது!*

கலைபுணர்ச்சிபெற்றவர்கள் விஞ்ஞானவிஷயங்களைத் தமக்கு உரிமையாக்கிக்கொண்டிருப்பதைப் போலவே விஞ்ஞானிகளும்.

---

[*That rivulet of smooth silver—how does it flow think you? It literally rows the earth with every scale for an oar; it bites the dust with the ridges of its body. Watch it when it moves slowly: a wave but without wind! a current but with no fall! all the body moving at the same instant. yet some of it to one side, some to another, and some forward and the rest of the coil backwards: but all with the same calm will and equal way—no contraction no extension: one soundless, causeless march of sequent rings, a spectral procession of spotted dust, with dissolution in its fangs, dislocation in its coils. Startle it: the winding stream will become

கவிதை முதலிய கலைத்துறைகளைத் தங்களுக்கும் உரிமையாக்கிக் கொள்ளுகிறார்கள். சிறந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் தாம் சோதித்தறிந்த உண்மைகளை மீண்டும் மீண்டும் சிந்தித்துத் தெளிவடைகிறார். அவை எத்துணை சிக்கலானவிஷயங்களாயிருந்தபோதிலும் அவற்றை நுட்பமாகவும், துல்லியமாகவும், தெளிவாகவும் கவனித்து விவரிப்பதே ஆராய்ச்சியாளருக்கு இயற்கையாகிவிடுகிறது. இக்காரணத்தாலும், அவருடைய மனத்தில் தெளிவு உள்ளபடியாலும், அவருடைய நடையிலும் தெளிவு ஏற்படுகிறது. தாம் புதிதாகக் கண்டுபிடித்த உண்மையின் பெருமையையும், அதன் சிறப்பியல்புகளையும் அவர் நன்கு உணர்ந்தவராகையால் அவருக்கு அதிலுள்ள ஊக்கத்தினாலும், உணர்ச்சிவேகத்தினாலும் அவருடைய நடையிலும் ஓர் உயர்வும், ஒழுங்கும், கவிதைத்தன்மையும், கருத்தழகும், செம்மையும், ரஸபாவமும் நிறைந்து தோன்றுகின்றன. நமது நாட்டிலே ஸர் ஸி. வி. ராமனை இதற்கு ஒரு சிறந்த சான்றாகக் காட்டலாம். அவர் பேசும்பொழுதெல்லாம் அவருடைய மனம்முழுவதையும் நிறைத்துத் ததும்பிக்கொண்டிருக்கும் விஞ்ஞானஉணர்ச்சியானது, 'செவ்விய மதுரம்சேர்ந்த

---

a twisted arrow; the wave of poisoned life will lash through the grass like a cast lance......... — RUSKIN

But now here's the first thing, it seems to me, we've got to ask the scientific people—what use a serpent has for its tongue, since it neither works it to talk with or taste with, or hiss with, nor as far as I know, to lick with, and least of all to sting with-and yet for people who do not know the creature, the little vibrating forked thread, flicked out of its mouth and back again, as quick as lightning, is the most striking part of the beast; but what is the use of it? Nearly every creature but a snake can do some sort of mischief with its tongue. A woman worries with it, a chameleon catches flies with it, a pholas digs holes in the rock with it, and a gnat digs holes in *us* with it: but the poor snake cannot do any manner of harm wilh it whatsoever: and what is *his* tongue forked for?

—RUSKIN.]

நற்பொருளிற் சீரிய கூரிய சொற்களின் பிரவாகமாக வெளிவருகிறது. ஒலியின் நுட்பங்களையும், ஒளியின் தத்துவங்களையும், பொருளின் அமைப்பையும் பற்றி அவர் செய்துள்ள ஆராய்ச்சிகளைக்குறித்து அவர் விவரித்துக்கூறுகையில் தாளக்கருவியாகிய மிருதங்கத்தின் நாதத்திலே கேட்கும் இனிமையையும், மயிலின் தோகையின் நிறங்களில் தோற்றும் அழகையும், ஒளிவீசும் வைரத்தின் காந்தியையும் அவர் வருணிக்கநேரிடுகிறது. அப்போதெல்லாம் அவர் ஒரு கவியாகவே தோன்றுகிறார்.

மனோபாவமின்றி விஞ்ஞானமும் இல்லை. பிரபஞ்சம் தோன்றுவதையும் அழிவதையும் தன்னுடைய கற்பனைக்கண்களாலேயே வானசாஸ்திரி காண்கிறான். அணுவின் அமைப்பிலே பிரபஞ்சத்தின் பெருமையைப் பௌதிகசாஸ்திரி தன்னுடைய மனக்கண்ணினாற்கண்டு மகிழ்கிறான். பிரபஞ்சத்தை ஊடுருவும் பகிரண்டக்கிரணங்கள் என்று சொல்லத்தகும் காஸ்மிக் கிரணங்களை மனக்கண்ணாலன்றி எவ்வகைக்கருவியாலும் காணஇயலாது. எண்ணிறந்த பொருள்களை இயற்றித்தரும் இயற்கையிலும் காணாப் புதுப்பொருள்களை மனோபாவத்தின் திறத்தால் விஞ்ஞானி இயற்றுகிறான்; புதிய சுவைகளையும், மணங்களையும், நிறங்களையும் இன்னும் இவைபோன்றவை பிறவற்றையும் இரசாயனி சிருஷ்டிக்கிறான். உலகிலே கடல்கள் தோன்றியதையும், காடுகள் அழிந்து கரியாகியதையும், மலைகள் உயர்ந்து எழுந்து அழிந்ததையும் பூதத்துவசாஸ்திரி தன்னுடைய கற்பனைத்திறம்படைத்த மனத்தாற் கண்டறிந்து தெளிவாக எடுத்துக்கூறுகிறான். இவ்வாறே விஞ்ஞானத்துறை ஒவ்வொன்றிலும் அறிவோடு மனோபாவமும் ஒத்துச்செல்லக் காணலாம்.

கவித்வமனத்தோடு விஞ்ஞானவிஷயங்களை வருணிப்பதும் விவரிப்பதும் நியாயமேயாயினும் மனோபாவம் செறிந்த கண்களோடு விஞ்ஞானநிகழ்ச்சிகளைச் சோதித்து அறியலாகாது. உள்ளதை உள்ளபடி காணமுயலுவதே ஆராயும் விஞ்ஞானியின் தொழில். சோதனைகள் நிகழ்த்தி, விஷயங்களின் உண்மைகளைக் காண முயலும்போது, கற்பனை என்பது உதவவே உதவாது. இவ்வாறு நடப்பது எளிதான காரியமன்று. 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய்' ஆவதுபோலவே, காதலர்கள்கண்ணுக்கு

எல்லாம் அழகு; பக்தன் கண்ணுக்கு யாவும் தெய்வம். புறக் கண்ணானது ஒன்றைக்காட்டியபோதிலும், அகக்கண்ணால் மற்றொன்றைக்காணுவது சாமானியர்க்கெல்லாம் பொதுவாக உள்ள இயல்பு. புறக்கண்ணுக்கு முட்செடியானது வெறும் முட்செடியாகவே தோன்றுகிறது; கவியின் அகக்கண்ணுக்கு அது நரைமயிர்செறிந்த கிழவனாகத்தோன்றுகிறது. அலமாரியின் பின்புறமாய் ஒளித்தோடும் சிறு சுண்டெலி கவிமனம்படைத்த சிறுமியின்கண்ணுக்குச் சின்னஞ்சிறிய வடிவுடைய தேவதையாகத் தோன்றுகிறது; ஆனால் தாதியின்கண்ணுக்கு அது அற்பச் சுண்டெலியாகவே காட்சியளிக்கிறது. *

தினையைப் பனையாகக் காணாது, தினையாகக்காண்பதே விஞ்ஞானியின் பண்பட்ட மனத்தின் இயல்பு. ஆயினும் உள்ளவற்றை உள்ளபடி விஞ்ஞானமுறையாற் கண்டறிந்தபின்பு, அவற்றைத் தொகுத்து, ஒழுங்குபடுத்தி, அவற்றினின்று யாவற்றுக்கும் பொதுவான உண்மைகளை ஊகித்தறிவதற்கும், உண்மைகளோடு முரண்படாக் கொள்கைகளை அமைப்பதற்கும் சிறந்த மனோபாவம் இருந்தாலன்றி முடியாது. அறிவோடொத்ததாய், உண்மைநெறியினின்று நீங்காததாய் உள்ள கற்பனையே விஞ்ஞானிசெய்யும்

---

[* "For double the vision my eyes do see,
And a double vision is always with me:
With my inward eye 'tis an old man grey,
With my outward a thistle across my way"

என்று ப்லேக் என்னும் கவி பாடுகிறார்.— —BLAKE

I heard a little tiny noise behind the cupboard door
And something soft and small and quick flashed right
across the floor
The day had very nearly gone and I could hardly see;
I do so wish that it would come again to visit me;
The whole day long I've looked and looked and looked
about the house,
I think it was a fairy, Nurse thinks it was a mouse.

—ROSE FYLEMAN.]

கற்பனை. கெப்லரும், ந்யூட்டனும், ஐன்ஸ்ட்டைனும், போர், ஜீன்ஸ், ராமன் முதலியோரும் செய்துள்ள கற்பனைகள் ஆராய்ச்சியிற் சிறந்த இவர்கள் கவிமனமும் படைத்தவர்கள் என்பதை நன்ருக விளக்குகின்றன.

[தொடரும்]

## மதிப்புரை

[திருநீலகண்டநாயனூர் சரித்திரமும் இயற்பகைநாயனூர் சரித்திரமும்:—இயற்றியவர்: கோபாலகிருஷ்ணபாரதியார். பதிப்பித்தவர்: திரு. S. கலியாணசுந்தரையரவர்கள். விலை ரூ 1. கிடைக்குமிடம்: திரு. S கலியாணசுந்தரையரவர்கள், தியாகராஜவிலாசம், பிள்ளையார்கோயில்தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.]

கோபாலகிருஷ்ணபாரதியார் சிறந்த இசைப்புலவர்களில் ஒருவர். திருநீலகண்டநாயனூர்சரித்திரமும் இயற்பகைநாயனூர்சரித்திரமும் அவரால், செவ்விய இசைப்பாடல்களாக இயற்றப்பட்டன. அவற்றுள் இப்பொழுது இடையிடையே சிலசில பாடல்கள் அகப்படவில்லை. எஞ்சியவையும் மறைந்தொழியாதவாறு அவற்றைத் தொகுத்து, மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் கதைத்தொடர்ச்சி குறிப்புக்கள் முதலியவற்றுடன் சென்னையிலிருந்து வெளிவரும் கலைமகள் என்னும் பத்திரிகையில் வெளியிட்டுதவினர். அவை இப்போது தனிப்புத்தகமாக ஐயரவர்கள் குமாரர் திரு. S. கலியாணசுந்தரையரவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. இப்புத்தகத்துள்ள இசைப்பாடல்களும் இடையிடையே அமைந்த கதைத்தொடர்ச்சியான வசனமும், மிக்க இனிமைபயப்பன. தமிழில் இசைப்பாடல்கள் போதிய அளவு இல்லையென்னுங் குறைதீர இவற்றைத் தனிப்புத்தகமாக அச்சிட்டு வெளியிட்ட திரு. S. கலியாணசுந்தரையரவர்கள்பால் தமிழ்மக்கள் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையராவர்.

**தமிழர்தொழும் வேதாந்தவாசிரியன்:**—இது, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் 16-வது வெளியீடாகும். தென்மொழியும் வடமொழியும் தேர்ந்து பல அரியபெரியநூல்களை இயற்றியுதவிய பெரியாரான ஸ்ரீ வேதாந்ததேசிகர் யார்யாரால் எங்கெங்கு எவ்வெவ்வாறு பாராட்டப்பட்டுள்ளனரோ அவற்றையெல்லாம் தொகுத்தெழுதி ஒரு புத்தகமாக இதனை அச்சிட்டுதவியவர் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசியான பந்தல்குடிப் பாரத்வாஜமாடபூசி ரே. திருமலை ஐயங்காரவர்களாவர். ஸ்ரீ வேதாந்த தேசிகர் பெருமையாக ஆங்காங்குக் காணப்படுமவற்றையெல்லாம் யாவரும் எளிதில் அறிந்து மகிழும்வண்ணம் அரிதின்முயன்று தொகுத்துதவிய ஐயங்காரவர்கள் நன்முயற்சி போற்றத்தக்கது. இப்புத்தகம்வேண்டுவோர் ஸ்ரீ. ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள், 15. கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை: என்றவிலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

---

**கும்பேசர் குறவஞ்சிநாடகம்:**— இது சற்றேறத்தாழ இருநூறாண்டுகளுக்குமுன் விளங்கிய முத்தமிழ்க்கவிராஜசேகரர் ஸ்ரீ. பாபநாசமுதலியாரவர்களால் இயற்றப்பெற்றது; கும்பகோணத்தலத்தின் பெருமைகளை இனிது விளக்குவது; இசைப்பாடல்கள் செறிந்தது. இதன் அருமை பெருமைகள் குறவஞ்சிநாடக இலக்கணம் முதலியவற்றை நன்குவிரிக்கும் முகவுரையுடன் இந்நூற் பொருள்களை யாவரும் அறிந்துகொள்ளுமாறுவரைந்த குறிப்புரையும் உடையதாக இதனை மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்நூல்நிலையத்தின் மூன்றாவது வெளியீடாக அச்சிட்டுதவிய திரு S. கலியாணசுந்தரையரவர்களது தமிழ்ப்பற்றும் ஆராய்ச்சித்திறமும் பாராட்டத்தக்கன. இதன் விலை ரூ 1-8-0. கிடைக்குமிடம்: கலாக்ஷேத்ரம் அடையாறு, சென்னை.

---

# பண்டைத்தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

உரு-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## பணியரும் பண்டுதேசமும்.

கி. மு. மூவாயிரம் ஆண்டுவரையில் பிரக்கியாதிபெற்றிருந்த தமிழ் நாகரிகத்துக்கு எமதுகாலத்திலேதானே தோண்டிவெளியாக்கப்பட்ட பழையபட்டணங்களின் சான்றுகள் கண்டோம். அந்த நாகரிகம் அழிந்து படுவதற்கு உண்டான காரணங்களுள் ஒன்று ஆரியர் சப்தசிந்துவில் வந்து இறங்கத்தொடங்கினமையாகும். தமிழர் உயர்ந்த நாகரிகமுள்ளவர்களாய்ப் பட்டணங்களில் வசித்தபோதிலும், தற்காப்புக்குரிய அடுக்கணிகளிற் குறை வுள்ளோராய்க் காணப்பட்டனர். ஆரியர் குதிரைமீதேறிப் போருக்குவரக் குதிரையில்லாத இவர்கள் முதுகுகாட்டநேர்ந்தது. இதனால், காலகதியில் தமிழரிருந்த பாகங்களில் ஆரியரே நாட்டாண்மை செலுத்துவோரானார்கள். ஆயினும், தமிழருள் ஒருசாரார் தங்கள் உள்நாட்டுக்கச்சவடத்திலும் பிறதேசவர்த்தகத்திலும் நெடுங்காலம் தளரா ஊக்கங்கொண்டிருந்ததை ஆரியரது இருக்குவேதத்திற் பல மேற்கோள்களால் அறிகின்றோம். அதில் தமிழ்வியாபாரிகளைப் பணிகள் பணியர் எனக் கூறியிருக்கிறது. பிற்காலத்து வணிகரும் இவர்கள் அடியிலுள்ளவர்களேபோலும். தங்கள் சத்துருக்க ளான பழைய இந்தியக்குடிகளையெல்லாம் தசியுக்கள் தாசர் என இகழ்ந்து வந்த ஆரியர், பணியரை விசேஷமாய் ஓநாய்களைப்போல அவாப்பிடித்தவர் கள் என்றும் (இருக் VI. 51, 14) இழுப்புணிகள் என்றும் (VI. 61. 1)நாள் எண்ணி வட்டிவாங்குவோர் என்றும் (VIII 66. 10), பலிகொடாதவர்கள், கொடியபேச்சுள்ளவர்கள்* என்றும் (VI. 6, 3,) அவமதித்துவரக் காண்கின்

---

* கொடிய பேச்சுள்ளவர்கள் என்றதற்கு வடமொழியில் மிருத்ரவாக் (Mridhravach) என்றிருக்கிறது. யாஸ்கர் இதனை மிருதுவாச் "மென்மை யாய்ப் பேசுவோர்" என வியாக்கியானித்தார் (நிருக்தம் 6, 31). இதுவே கருத்தாயின், மிருத்ரவாச் எனும் விவரம் தமிழ்ப்பாஷையைக் குறித்ததாக லாம். வடமொழி இராமாயணத்தில் (சுந்தரகாண்டம்-31.) "மதுரம் வாக்யம்" என்ற சொற்றொடரால் தமிழ் குறிக்கப்பட்டது எனல் "செந் தமிழ்"ப்பத்திராசியர்கருத்து (Vol. 36, No. 6)

ரேும். பணியர்கையிலேயே வியாபாரம் முழுதும் இருந்ததற்குப் பண்ய (விலைப்பொருள்) எனும் வடசொல்லும் சான்று என்பர். தமிழில் பணம் என்பதும் அது. பணியர் குற்சன் எனும் அரசனேடு எதிர்த்துப் போராடி மூதுகுகொடுத்தவர்கள் என்றும் குறித்திருக்கிறது (VI, 20, 4). பிறிபு எனும் ஒரு பணியன், பரத்துவாசன் எனும் இருடி, பொழுதுசாய்ந்தபின் காட்டினுள் வழிதெரியாது அலைந்து பசியோடிருந்தவனுக்கு உதவியமை புகழப்பட்டிருக்கிறது (VI. 45, 33). பிறிபு அல்லது விறிது தச்சுவேலையில் பேர்போனவன் (மனுதர்ம. 10.107). அவனைத் துவஷ்டா என்றும் பாராட்டி யிருக்கிறது. பணிகள் என இருக்குவேதம் கூறுவது மனுஷரைப்பற்றி யல்ல; ஆகாயச்சத்துருக்களைப்பற்றியே எனச் சிலர்கருதினும், நல்லாராய்ச்சி யின்படி தசியுக்கள் என ஆரியர் கூறிய இந்தியப்பழங்குடிகளுள் ஒரு சாரா ரும் பணி எனும் சொல்லாற் குறிக்கப்பட்டமைதான் பொருத்தமாகும்.

இந்தப் பணியரே கப்பல்வழியாய்ப் பிறதேசவர்த்தகஞ்செய்தவர்களு மாகலாம். இவர்கள் மெசொப்பொத்தாமியாவிலும் வடஆபிரிக்காக்கரை களிலும் தென்ஐரோப்பாத்துறைகளிலும் சென்று அங்கங்கே சீர்திருத்தத் துக்கு அடியிட்டார்கள் எனக் கூறப்படுகின்றது. பொயினிக்கே எனக் கிரேக்கர் அழைத்த பினீசியரோடு இவர்களை ஒற்றுமைப்படுத்துவாரும் உளர்.* பியுனிக் சாதியும் தமிழரும் ஆதியில் ஒற்றுமையுள்ளவர்கள் எனப்படுகின்றமை யால், பினீசியரோடு அவர்களுக்குத் தொடர்பு உண்டாயிருந்தமை பெறப் படும். எறொடோத்துஸ் எனும் ஆதிக் கிரேக்கசரித்திராசிரியர் தம்காலப் பினீசியரிடத்திற் கேட்டு எழுதிவைத்த பாரம்பரியத்தின்படி, அன்னோர் முன்னுளில் எருத்திரியக்கடலோரங்களிலிருந்து வந்தவர்களாகலாம்.† எருத் திரியக்கடல் எனும் பெயர் அக்காலம் செங்கடலுக்கின்றி‡ அராபிக்கடலுக்கு வழங்கியபடியாலும் அக்கடல் அராபியா, பர்சியா, பலுச்சிஸ்தான் மேற்கு இந்தியா எனும் கரைகளை அலைசினமையாலும் இந்தியாவிலிருந்துசென்ற

---

* Abinas Chandra Das: Rig Vedic India ps. 111, 114. ஆயின் இவ்வாசிரியர் பணியரை ஆரியருள் ஒருசாரார் எனக் கூறுகின்றமை அமை யாது.

† Herodotus 1, 1.

‡ See Periplus &c. p 50.

பணியரே ஆதியில் மத்தியதரைக்கடலருகில் தமரோடுபோய்ச் சேர்ந்து பொனிக்கோய் எனும் பெயர் அவர்களுக்கு உண்டாகக் காரணமாகியிருக்க லாம். பினீசியப்பெயரைப் பணியோடுசேர்த்துச் சொல்லுவாருமுளர். தமிழர் மத்தியதரைக்கடலோரங்களிலிருந்து இந்தியாவுக்குக்கொண்டுவந்த சீர்திருத்தம் ஏற்றம்பெற்று மீண்டும் அக்கடலோரங்களுக்குச் சென்றது: எனக்கொள்ளுதலில் தவறு ஒன்றுமில்லை. முன்னொருகால் காட்டுமிருண்டி களாயிருந்த ஐரோப்பியர், தமிழருக்கும் எகிப்தியர் பபிலோனியருக்கும் பொதுவாய் அக்காலம் விளங்கிய சீர்திருத்தத்தினால் மேல்நிலையடைந்து கொண்டவர்கள், இற்றைநாளில் மீண்டொருகால் சீர்திருத்தத்தைத்தர வந்திருத்தலையும் காண்கின்றோம்.

எகிப்தியருள் வழங்கிய பண்டு எனும் நாட்டுப்பெயரும் பணியரோடு தொடர்புடையது என்பர்“ இருக்கு வேத இந்தியா” எனும் நூலாசிரியர்.* பணி எனும் சொல்லிலுள்ள ணகரம் நமது பண்டம் எனும் சொல்லிற்போல் ண்ட் என உச்சரிக்கப்படவேண்டியதென்பதும், பண்டியர் என்றதி லிருந்து பாண்டியர் எனும் தமிழ்நாட்டுப் பழைய அரசர்களின்பெயர் வந்த தென்பதும், அவர்களது நாடு பண்டு என அழைக்கப்பட்டதாகலாம் என்ப தும் அவர்கருத்து. பாண்டியர்கள் வடநாட்டிலிருந்துவந்தவர்கள் என்ற ஐதிகம் பணியர், முன் வடநாட்டிலே பரந்து மிக்கிருந்தவர்கள், பின் தென் னாட்டில் ஒருங்குவந்து வாழ்ந்ததைக் காட்டுவதாகலாம். அங்ஙனமாயின், எகிப்தியர் பண்டு எனும் பெயரால் ஆபிரிக்காக்கரையிலிருந்த ஒரு பிரதேசத் தோடு பாண்டியர்நாடாகிய தென்னிந்தியாவையுங் குறித்தனர் என வேண்டும். எங்ஙனமெனில், எகிப்தியருடைய சாசனங்களில் அவர்களுக்கு அதிக தூரத்திலிராத சோமாலிலாண்டும் சிதைடவை பண்டு எனும் பெயராற் குறிக்கப்படுகின்றது; அதிகதூரமான ஒரு நாடும் குறிக்கப்படுகின்றது. ஆதலால் அவர்களுக்குள் பெயரைச்சுட்டி நியதமான ஒரு எண்ணம் நிலவா திருந்ததுபோலும். எகிப்தியர்கள் அதிகமாய்க்கருதிய பண்டுதேசத்தைப் பற்றிச் “சரித்திராசியர்களது சரித்திரம்” எனும் நூல் சொல்லுவது இது: “எகிப்து (கமிற்)நாட்டுப் புராதனகுடிகள் பண்டு எனும் பெயரினால் ஒரு தூர தேசத்தைக் கருதினார்கள். அதனை மகாசமுத்திரம் அலைசிக்கொண்டிருந்தது. அதிலே குன்றுகளும் கருங்காலி முதலிய விலையேறப்பெற்ற மரக்காடுகள் நிறைந்த பள்ளத்தாக்குகளும் இருந்தன. அங்கே சாம்பிராணியும் வாசனைப் பிசினும் விலையுயர்ந்த லோகங்கள் கற்களும் காணப்பட்டன. மிருகங்களும்

* Rig Vedic India. p. 116.

மிக இருந்தன. எங்ஙனமெனில், அங்கே ஒட்டைச்சிவிங்கியும் சருகுபுலியும் வேங்கையும் நாய்த்தலைக்குரங்கும் நீண்டவாற் குரங்கும் உள. நவீனமான சிறகுடைய பட்சிகள் அதிசயமான மரக்கிளைகளிற் பறந்தேறியிருக்கும். அம்மரங்களுள் சாம்பிராணிமரமும் தென்னையும் விசேஷமானவை. எகிப்தியர் கூறிய ஒப்பீர்தேசமும் அதுதான். அராபியாவுக்கெதிரே கடலுக்கப்பாற் கிடக்கின்ற இக்காலத்துச் சோமாலிலாண்டையே அன்னோர் பண்டு என்றனர்." * ஆயின், எகிப்தியர் கூறிய விவரங்களில் ஒன்றிரண்டன்றி மற்றவை சோமாலிலாண்டுக்குப் பொருந்துமாறில்லை. அவர்கள் கருதிய தூரதேசத்தின் மிருகங்களுள் ஒட்டைச்சிவிங்கியொன்றைத்தவிர ஏனையவைகள் இந்தியாவுக்கே உரியன. ஒட்டைச்சிவிங்கி என்றது சம்பார் (Sambhar) அல்லது அதனைப்போன்ற வேறொன்றாகலாம். சாம்பிராணி என்றது சந்தனத்தை அல்லது அகிலைப்போன்றது. இதுதான் முற்காலத்து மேற்குநாட்டாரால் இந்தியாவிலிருந்து விரும்பித்தேடப்பட்டது. கருங்காலி விலையுயர்ந்த கற்கள், குரங்கு, மயில் ஆதியன இந்தியாவிலிருந்துதான் முற்காலம் மேற்குச்சீமைகளுக்கு ஏற்றுமதியாயின. எகிப்தியருடைய வேறொரு பழங்கதையின்படி அவர்களது ஹோருஸ் எனும் தெய்வம் "பண்டு தேசத்திலிருந்து மேற்கே எழுந்துவருகின்ற உதயதாரகை" எனப்பட்டது. ஆகவே, எகிப்தியருக்குப்பண்டுதேசம் கிழக்கிலுள்ளது. சோமாலிலாண்டோ அவர்களுக்குத் தெற்கிலுள்ளது. அன்றி, இது எக்காலத்திலாவது விசேட சீர்திருத்தத்துக்கு உறைவிடமாயிருந்ததுமன்று. பின்னும், பண்டுநாட்டுக்குப் போகவர மூன்று ஆண்டுப் பயணம் வேண்டும் எனப்பட்டமையால் தென்னிந்தியாவே அவர்கள் பல சந்தர்ப்பங்களிற் சுட்டிய பண்டுவாம் என முடிக்கலாம்.

பண்டுதேசத்திலேதான் ஒப்பீர் இருந்ததென்பது எகிப்தியரது கொள்கை. ஒப்பீரை எபிரேயரும் மோசேசுகாலந்தொட்டு இந்தியாவிலுள்ளதாக அறிந்திருந்தனர்.† பிற்றைநாளில் (கி. மு. பத்தாம்நூற்றாண்டு) சலோமொன் அரசன்காலத்தில் தீர்தேசமன்னன்கப்பல்கள் அந்த அரசனுக்காக ஒப்பீரிலிருந்து பொன்னும்அகிலும் யானைத்தந்தமும் குரங்கும் மயிலும் கொண்டுசென்றன என்பது யோசேபு எழுதிய சரித்திரநூலிலும் பழைய ஏற்பாட்டின் அரசராகமத்திலும் காணப்படுகின்றது. பழைய ஏற்பாடு

* Historians' History of the World I p. 108.
† Vigouroux : Dictionaire de la Bible, s. v. ophir.

எபிரேயபாஷையிலுள்ளது. ஆயின் இந்தியாவுக்குமாத்திரம் உரிய இப்பொருள்களின்பெயர்களோ சிறிது உருவம் மாறிய தமிழ்ச்சொற்களாய் வருகின்றன. அகில் அல்கும் (algum,) அல்லது அல்முக் (almug) எனப்பட்டது. அகில் தென்னிந்தியாவில்மட்டும் உள்ளதாகையால் அச்சொல் (சிலர் எண்ணியதுபோல) வடசொல்லாவதில்லை. வல்முக் எனும் வடசொல் தமிழ் அகிலின் திரிபாகலாம். யானைத்தந்தம் (Shen habbim) இபப்பல் எனப்பட்டது.* இபம் என்பது வடசொல்லெனச் சிலர் கூறிப் போந்தனர். ஆயின், அது இம்பா எனும் யானையை உரப்பும் சொல்லிலிருந்துவந்த தமிழ்ச்சொல்லேயன்றி அதற்கு வடமொழியில் தாது கிடையாது†. குரங்கு கோப் (quof). இது கவி எனும் தமிழ்ச்சொல்லாம். கவிழ்ந்து நடப்பது கவி. குரங்குப்பெயரும் குரங்குதலில்நின்று வந்ததுபோலும். குரங்கின்பெயராகிய கவி எனும்சொல் எகிப்திய சித்திரலிபியிலும் கவு (kafu) எனக் காணப்படுகின்றது என்பர். மயில் எபிரேயநூலில் துகிம் (tukkyim) என்று வழங்கப்படும். இது தோகை எனும் தமிழ்—மலையாளச் சொல். தோகைதான் துகி (ஒருமை) என்று எபிரேயத்திலும் தொபோஸ் (tofos) என்று கிரேக்கத்திலும் தவிஸ் (tavis) என்று பாரசீகத்திலும் பவோ (pavo) என்று லத்தீனிலும் மாறிவந்து அப்பால் பீ-கொக் (pea-cock) என ஆங்கிலத்தில் ஆயிற்று. தென்னிந்தியாவுக்குத் தனியுரிமையுள்ள இப்பொருள்களோடு பொன்னும் அங்கு மிக்கிருந்ததற்கு ஒருகாலம் அங்குவிளங்கிய பொற்சுரங்கங்களும் பொன்மணலை வாரிச்சென்ற பொன்னியாறும் போதிய சான்று என்பர். ‡ ஆதலால், தென்னிந்தியக்கரையே ஒப்பீர் எனப்பட்டது எனலாம். உவரி எனும் கரைப்பட்டணப்பெயர்தான் ஒப்பீர் ஆயிற்று என்பது சிலர் கருத்து.§ வேறு சிலர் சிந்துநதிமுகத்துவாரத்திலுள்ள அபீரா என்பர்.

[தொடரும்.]

---

* Dictionaire de la Bible, s. v. ophir.

† See Etymological & Comparative Lexicon s. v. இபம்

‡ Some contributions &c. p. 327 of. Max Muller Science of Language I 233 &c.

§ Tamilian Antiquary I, 23.

உ

## ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர்மன்றம்

நல்லூர்—யாழ்ப்பாணம்.

# ஆண்டுவிழாக்கொண்டாட்டம்

## பட்டங்கள் வழங்கின வரலாறு

நிகழும் தாரணஆண்டு மார்கழித்திங்கள் 16, 17 (30, 31-12-1944) ஆம் நாட்களில், ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர்மன்ற ஆண்டுவிழாக்கொண்டாட்டம் யாழ்ப்பாணத்து நகரமண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செந்தமிழ், வடமொழி, ஆங்கிலம், சிங்களம், பாளி என்னும் மொழிகளின் துறைகளில் நிரம்பின புலமையும் நூலாராய்ச்சிவன்மையும் மிக்க பல அறிஞர்கள், ஆடவரும் மகளிருமாய் இரண்டுநாட்களிலும் மாபெரும்புலவரவைக்கு மிக ஆர்வத்தோடு வந்திருந்தார்கள். தமிழ்த் தென்னாட்டிலிருந்தும் புலவர்களும் புலவர்பெருமாட்டிகளும் வந்திருந்தார்கள். மேல்மன்ற வழக்கறிஞர்கள் பலர், மாகாணஆட்சித்தலைவர்கள் பலர், ஆங்கிலக்கல்லூரித்தலைவர்கள் பலர், அரசியல்வல்லோர் பலர்-எல்லோரும் வந்திருந்தனர். இரண்டுநாட்களிலும் செந்தமிழ்ப்புலவர்களால் இனிய அரிய ஆராய்ச்சிவிரிவுரைகள் நிகழ்த்தப்பட்டு அவையிலுள்ளோரால் நன்கு பாராட்டப்பட்டன. இவ்வாறு இரண்டுநாட்களிலும் யாழ்ப்பாணம் என்னும் செந்தமிழ்ச்செல்வர்வாழ்நன்னகரில் தமிழ்மேகம் பொழிந்த தீந்தமிழ் வெள்ளம் ஈழநாட்டின் பலவிடங்களிலுமுள்ள சிங்களவாவிகளை நிரப்பி விட்டது.

ஆண்டுவிழாக்கொண்டாட்டத்தில் ஷை புலவர்மன்றத்தாரால், தமிழ் நிலங்காவல்செய்யும் ஒரு தமிழரசருக்கும், ஐந்து செந்தமிழ்ப்புலவருக்கும் சிறப்புப்பட்டங்கள் வழங்கப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:—

(க) செந்தமிழ்ப்பாண்டியர்மருமானும், மதுரைத்தமிழ்ச்சங்க நிரந்தர அக்ராசனாதிபதியுமான, மகா-௱-௱-ஸ்ரீ சண்முகராஜேசுவரநாகநாத சேதுபதி என்னும் இராமநாதபுரம் மஹாராசா அவர்களுக்குப் புலவர் புரவலன் என்னும் பட்டம் செப்பு இலச்சினையொடு வழங்கப்பட்டது.

(உ) உலகியல்விளக்க நூலாசிரியரும், மதுரைத்தமிழ்ச்சங்கப் பரீக்ஷகருமான ஸ்ரீமத். க. சு. நவநீதகிருஷ்ணபாரதியாரவர்களுக்குப் பண்டித மணியென்னும் பட்டம், செப்பு இலச்சினையொடு வழங்கப்பட்டது.

(ஈ) மதுரைத்தமிழ்ச்சங்கத்துக் கௌரவகாரியதரிசியாயும், வித்யா விஷய ஆலோசனைச்சபை நிர்வாகசபைகளில் அங்கத்தவராயும் இருந்தவரும், அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியாய் இருந்தவரும், தமிழில் நூலாராய்ச்சியும் நாவன்மையும் மிக்காருமான, ஸ்ரீமத் பசுமலை. ச. சோமசுந்தரபாரதியாரவர்களுக்கு நாவலர் என்னும் பட்டம் செப்பு இலச்சினையொடு வழங்கப்பட்டது.

(உ) மதுரைத்தமிழ்ச்சங்கப்பண்டிதரும், ஷை சங்கவித்யாவிஷய ஆலோசனைச்சபையின் ஓர் அங்கத்தவரும், அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் பேராசிரியராயிருந்தவரும், ஈழநாட்டுப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராயிருப்பவரும், மதங்கசூளாமணியென்னும் நாடகநூலையாக்கினவரும், இசைமரபுவிளக்கும் யாழ்நூலை இன்று ஆக்கிவருபவருமான ஸ்ரீமத். சுவாமி விபுலாநந்தரவர்களுக்கு முத்தமிழ்ப்புலவர் என்னும் பட்டம் செப்பு இலச்சினையொடு வழங்கப்பட்டது.

(ஊ) சென்னைப்பல்கலைக்கழகத்திலே நாற்பது ஆண்டுகளுக்குமுன்பு, தமிழ் ஸம்ஸ்க்ருதத்தொடு B. A. பரீக்ஷையில் தேர்ச்சிபெற்றவரும், சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குத் தாம் ஆராய்ந்து ஓர் உரை எழுதினவரும், உவெஸ்லியன் மிஷன் பாதிரியாராக இருந்து வெள்ளைக்கார மிஷனரிகளுக்குத் தமிழர்தம் கடவுட்கொள்கையை நன்கு உணர்த்திவைத்தவருமான ஸ்ரீமத். ரெவரண்ட் க. முருகேசு அவர்களுக்கு முதுபெரும்புலவர் என்னும் பட்டம் செப்பு இலச்சினையொடு வழங்கப்பட்டது.

(எ) மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் கடந்த 25 ஆண்டுகளாக அங்கத்தவராயிருந்துவருபவரும் தமிழ், ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், லத்தீன், ஈபுரு, கிரீக்கு, பிரெஞ்சு, சர்மன், இத்தாலி முதலிய 9 பாஷைகளை அறிந்தவரும், கடந்த 20 வருஷங்களாய்ச் சொல்லாராய்ச்சிசெய்து பல நூல்களை ஆக்கியவரும், ஈழநாட்டிலே சரித்திரஆராய்ச்சியில் மிகச்சிறந்து விளங்கிவருபவரும், செந்தமிழில் அரியவிஷயங்களை ஆராய்ந்து தவறாமல் எழுதிவருபவரும், சிறந்த புலவருமான ஸ்ரீமத். நல்லூர் சுவாமி ச. ஞானப்பிரகாசரவர்களுக்குச் சொற்கலைப்புலவர் என்னும் பட்டம், செப்பு இலச்சினையோடு வழங்கப்பட்டது.

தலைமைஅலுவல்நிலையம்
ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர்மன்றம்
நல்லூர்—யாழ்ப்பாணம்
14—1—1945.

வ. சு. இராஜஐயனுர்,
செயலாளர்.